ஞானானந்த குருவே

நின் பாத பத்மங்களைபோற்றி பணிந்தேன்
பாலித்தருள் செய்து காரும் குருதேவா

பேரானந்தமாக விளங்கும் ப்ரஹ்ம ஞான ஸ்வரூபனே
ஸ்ரீ ஞான பண்டித குருவே
தவ மோனமங்கள கிரியே
அருட் ஜோதி பீட ஸத்குருவே
சிவரத்ன கிரீச ப்ரகாசனே

கமல முகம் அவர் கருணை பார்வையும்
காண்பவர் மனதை ஈர்க்கும்
அவர் கனிந்த வாயினால் அருளும் திருமொழிகள்
அன்பர் மனக்கவலை போக்கும்
அமலனை அண்டி அடிபணிந்தோரை
அபய கரங்களே கார்க்கும்
அவர் அருளை நாடியே வந்தடைந்தோற்கு
ஜன்ம ஸாபல்யம் ஆகும்